# 72. பரம்பொருட்கண்ணி

**படைப்பாய் புரப்பாய்பின் பாழாக்கி யாள்வாய்**
**கடைப்பட்ட நாயேற்கென் கண்ணே பரம்பொருளே.**

*படைப்பாய் புரப்பாய் பின் பாழாக்கி ஆள்வாய்*
*கடைப்பட்ட நாயேற்கு என் கண்ணே பரம்பொருளே.*

என் கண்ணே! பரம்பொருளே! நீ எல்லாவற்றையும் படைப்பாய், காப்பாய், இறுதியில் அழிப்பாய்; இவ்வாறு ஆண்டு கொண்டுள்ளாய். கடைப்பட்ட நாய் ஆன எனக்கு என்ன செய்ய உள்ளாய்? 1

**நீடனந்தச் சோதிவெளி நின்றுசுக துக்கமென்னும்**
**நாடகங்கள் செய்திடலு நட்பே பரம்பொருளே.**

*நீடு அனந்தச் சோதி வெளிநின்று சுகதுக்கம் என்னும்*
*நாடகங்கள் செய்திடலும் நட்பே பரம்பொருளே.*

பரம்பொருளே! பெரிய அளவில்லாத ஒளி வெளியில் நின்று, உயிர்கட்கு இன்பதுன்பம் அளிக்கும் நாடகங்களைச் செய்திடுதற்கும் உன் அன்பே காரணமாகும். 2

**சிவனிடத்திற் சீவச் செயலொப் படைத்தோர்**
**அவனித் தொழில்விரும்பு வாரோ பரம்பொருளே.**

*சிவனிடத்தில் சீவச் செயல் ஒப்படைத்தோர்*
*அவனித் தொழில் விரும்புவாரோ பரம்பொருளே.*

பரம்பொருளே! சிவனிடத்தில் சீவன் செயல் முழுதும் ஒப்படைத்துச் சரணடைவோர், இவ்வுலகத் தொழில் எதையும் விரும்புவார்களோ? 3

**உடல்பொரு ளாவியெல்லா முன்னிடமீந் துள்ளோர்க்**
**குடல்பொரு ளாவிதுண்டா வுண்டோ பரம்பொருளே.**

*உடல் பொருள் ஆவி எல்லாம் உன்னிடம் ஈந்து உள்ளோர்க்கு*
*உடல் பொருள் ஆவி துண்டா உண்டோ பரம்பொருளே.*

பரம்பொருளே! உடல், பொருள், உயிர் எல்லாமும் உன்னிடம் அர்ப்பணித்து விட்டவர்களுக்கு, உடல், பொருள், உயிர் எனத் தனியாக உண்டோ? 4

**சும்மா விராமலெனைச் சும்மா விருக்கவைத்த**
**அம்மா னுனக்கயனா னாகேன் பரம்பொருளே.**

சும்மா இராமல் எனைச் சும்மா இருக்க வைத்த
அம்மான் உனக்கு அயல் நான் ஆகேன் பரம்பொருளே.

பரம்பொருளே! சும்மா இருக்காதபடிச் சும்மா இருக்க வைத்த அப்பனாகிய உனக்கு நான் வேறு ஆகேன்! 5

**சொல்லே றரும்புகழ்கள் சொன்னபெரி யோனடைந்த**
**எல்லா நலமுமெனக் கீந்தாள் பரம்பொருளே.**

சொல்ஏறு அரும்புகழ்கள் சொன்ன பெரியோன் அடைந்த
எல்லா நலமும் எனக்கு ஈந்து ஆள் பரம்பொருளே.

பரம்பொருளே! புகழ்மிகுந்த அரிய திருப்புகழ்ப் பாக்கள் பாடியருளிய, பெரியோன் ஆன அருணகிரிநாதர் அடைந்த எல்லா நன்மைகளையும், எனக்கும் அளித்து ஆண்டுகொள்வாயாக. 6